பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 18 புதன்கிழமை 31.03.2021 கதிர் 14

## பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

எக்ஸ்ரே கதிர் இயந்திரப் பகுதி உத்தியோகத்தர்களின் நீண்டகால கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்து அவர்கள்நாடுபூராகவும்பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மூன்று நாளாகளாகத் தொடரும் இந்த பணிப்புறக்கணிப்பு காரணமாக

2

# ஜேர்மனியிலிருந்து 31 புகலிடக் கோரிக்கையாளர்கள் வலுக்கட்டாயமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்

ஜேர்மனியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த புகலிடக் கோரிக்கையாளர்களில் 31பேர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

31 புகலிடக் கோரிக்கையாளர்களும் 'முசெல்சோர்ப்' விமான நிலையத்தினூடாக ஜேர்மனி அதிகாரிகளால் நேற்று வலுக் கட்டாயமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று சர் வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இன்று இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜேர்மனியில் வசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்கள் 100 பேர் அண்மையில் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு அதிகாரிகள் தீர்மானித்தனர்.

இதைத் தொடர்ந்து அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு முன்னாலும் மற்றும் விமான நிலையப் பகுதிகளிலும் பல்வேறு சிவில் அமைப்புகளால் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், புகலிடக் கோரிக்கையாளர்களின் அகதி

2

# மேயர் பதவியில் மணி நீடிக்கலாம்

## வழக்குக் கண்டம் தள்ளிப்போனது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ் மாநகரசபை உறுப்பினராகத் தாம் நீடிக்கின்றமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தின் முடிவு மேயர் மணிவண்ணனுக்குச் சார்பானதாக இன்று வெளியானமையால் அவரின் மேயர் பதவிக்கு இருந்த ஆபத்து தற்காலிகமாகத் தள்ளிப் போய்விட்டது.

2

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

## 6 ஆயிரம் வாள்கள் தொடர்பில் பொலிஸ் விசேட விசாரணை

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதியில் வெளிநாடுகளில் இருந்து 6 ஆயிரம் வாள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று சட்டமா அதிபரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2

## துணிவு இருந்தால் தேர்தலை இவ்வருடம் நடத்திக் காட்டுக!

### அரசுக்கு எதிரணி சவால்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவர் தலைமையிலான அரசுக்கும் துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலை இவ்வருடம் நடத்திக் காட்டட்டும்.

- இவ்வாறு சவால் விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின்

2

## 6 லட்சம் தடுப்பூசி டோஸ்கள் சீனாவிலிருந்து இலங்கைக்கு



சீனாவின் சினோபார்ம் கொரோனாத் தடுப்பூசியின் 6 லட்சம் டோஸ்கள் இலங்கையை வந்தடைந்துள்ளன.

இதன்படி, பீஜிங்கிலிருந்து ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல் - 869 என்ற விமானத்தில் இன்று முற்பகல் 11.28 மணியளவில் கட்டுநாயக்கா-பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு இந்தத் தடுப்பூசி டோஸ்கள்

2

## 300 கிலோ ஹெரோயின், துப்பாக்கிகளுடன் இலங்கையர்கள் 6 பேர் இந்தியாவில் கைது!

இந்தியக் கடற்பரப்பில் போதைப் பொருள் மற்றும் ஆயுதங்களுடன் படகு ஒன்று தடுத்து வைக்கப்பட்டதை அடுத்து 6 இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கடலோரக் காவல் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மினிகோய் தீவுக்கு அருகில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட படகில் 300 கிலோகிராம் ஹெரோயினுக்கு மேலதிகமாக ரஷ்ய உற்பத்தியான ஐந்து ஏகே 47 ரக துப்பாக்கிகளும், அதற்குப் பயன்படும் ஆயிரம் துப்பாக்கி ரவைகளும், 9 மி.மீ. வெடிமருந்துகளும் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கை மீன்பிடிக் கப்பலான 'ரவி ஹான்சி' கடந்த மார்ச் மூன்றாம் வாரத்தில் கேரளாவின் விஜின்ஜாம்

2


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.

- றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.



- ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
- வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.

077 652 9583


## விரைவில் கவிழும் கோட்டா அரசு!

### அடித்துக் கூறுகின்றார் அநுரகுமார



இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் மோசமான அரசாக கோட்டாபய அரசு தடம் பதித்துள்ளது. இந்த அரசுகவிழும்காலம்வெகுதொலைவில் இல்லை.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சமகால அரசியல்

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 ஆயிரம் வாள்கள் தொடர்பில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈஸ்டர் தாக்குதல் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்டன என்று கூறப்படும் 6 ஆயிரம் வாள்களுக்கும் என்ன நடந்தது என்று விசாரணை நடத்துமாறு கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையால் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனு இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயாதுன்னே கொரயா ஆகியோரை உள்ளடக்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி அவந்தி பெரேரா, வாள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் தலைமையில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இதனால் குறித்த மனுவைத் தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அவசியம் இருக்காது எனவும், இந்த விடயம் குறித்து மனுதாரரிடம் கேட்டறிந்து எதிர்வரும் மே மதம் 6ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அறிவிப்பதாகவும் அவர் மன்றில் கூறியுள்ளார்.

## துணிவு இருந்தால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் நடைபெற்ற நாள்களில், இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் விரைவில் நடைபெறவுள்ளது என ஜனாதிபதி தலைமையிலான அரச தரப்பினர் கருத்துக்களைத் தெரிவித்து வந்தனர். ஆனால், கூட்டத் தொடர் நிறைவடைந்த பின்னர் - இலங்கை மீது புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அமைச்சர்கள் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வருடம் மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என ஓர் அமைச்சரும், கலப்பு முறைமையில் விரைவில் தேர்தலை நடத்த அரசு உத்தேசித்துள்ளது என இன்னோர் அமைச்சரும், புதிய அரசமைப்பு வந்த பின்னரே தேர்தல் நடக்கும் என மற்றுமோர் அமைச்சரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. தீர்மானத்துக்கு அஞ்சியே மாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் விரைவில் நடைபெறும் என்று அரசு கூறியிருந்தது. ஆனால், தீர்மானம் நிறைவேறிய பின்னர் அரசின் உண்மை முகம் வெளிப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தற்போது நடைபெற்றால் அரசு படுதோல்வியடையும் என்பது ஜனாதிபதிக்குத் தெரிந்த விடயம். அதனால்தான் தேர்தலை நடத்துவதில் அரசு இழுத்தடிப்புச் செய்கின்றது.

ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான அரசுக்கும் துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலை இவ்வருடம் நடத்திக் காட்டட்டும் - என்றார்.

## 300 கிலோ ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கரையில் இந்திய கடலோரக் காவல் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு, இந்தியக் கடலோர காவல்படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் படகைக் கொண்டு வந்திருந்தனர்.

## 6 லட்சம் தடுப்பூசி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வரப்பட்டன.

இவற்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெற்றுக்கொண்டார்.

சீனாவின் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள இந்தத் தடுப்பூசி டோஸ்கள், விசேட குளிர்சாதன வசதிகளுடன் கூடிய லொறிகளில் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

## விரைவில் கவிழும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசின் எதேச்சதிகாரப்போக்கால் நாட்டின் ஜனநாயகம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மட்டத்தில் நாடு பேரவமானத்தைச் சந்தித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்துக்குச் சென்றுள்ளது. வறுமையின் பிடியில் சிக்கும் நிலையை நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

அரசின் திமிர்த்தனத்தை அடக்கவே வெளிநாடுகளினாலே இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது நாட்டுக்குப் பேராபத்தை ஏற்படுத்தியுள்ளது.

எந்த மக்களின் ஆதரவுடன் இந்த அரசு ஆட்சிக்கு வந்ததோ அந்த மக்களினால் இந்த அரசு விரைவில் கவிழ்க்கப்படும் - என்றார்.

## மேயர் பதவியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர சபை உறுப்பினர் மயூரன் மற்றும் மணிவண்ணன் ஆகியோரை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருந்து இடைநிறுத்தியமைக்கு எதிராக மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையை நீக்க கோரி மாகாண குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளும் இன்று தள்ளுபடி செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட ஆறு பேரைக் கட்சியில் இருந்து நீக்கிய விடயம் தொடர்பில் குடியியல் மேன்முறையீட்டு மாகாண நீதிமன்றின் தீர்ப்பு இன்று 31ஆம் திகதி வழங்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ( அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின்) மாநகர சபை உறுப்பினரான வி.மணிவண்ணன் உட்பட ஆறுபேரை ஏற்கனவே கட்சியில் இருந்து நீக்கியதான அறிவித்தலை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைத்திருந்தார். அவ்வாறு கிடைத்த கடிதத்திற்கமைய 21 நாள்களிற்குள் சம்பந்தப்பட்டோர் உறுப்புரிமை இழந்தமை தொடர்பான அரச இதழ் பிரசுரிக்கப்படும் என தெரிவத்தாட்சி அலுவலர் மணிவண்ணன், மயூரன் உள்ளிட்ட ஆறு உறுப்பினர்களிற்கும் அறிவுறுத்தல் அனுப்பி வைத்தார்.

தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் இப்படி கடிதம் அனுப்பிய ஆறு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களில் மணிவண்ணன், மயூரன் உட்பட நால்வர் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள். மற்றைய இருவர் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள். இந்த ஆறு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் தெரிவத்தாட்சி அலுவலரின் இந்த முடிவிற்கு இடைக்காலத் தடைகோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தபோது மாவட்ட நீதிமன்றம் இந்த ஆறு உறுப்பினர்களையும் கட்சியில் இருந்து நீக்கும் முடிவிற்கு இடைக்காலத் தடை விதித்தது.

மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அல்லது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் குடியியல் மேன்முறையீட்டு மாகாண நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களில் மயூரன் மற்றும் வி. மணிவண்ணனிற்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவுற்று வழக்கின் தீர்ப்பு இன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. நீதிபதிகளான ஏ.எச்.எம்.மனாப் மற்றும் சசி மகேந்திரன் ஆகியோரினால் இன்று முற்பகல் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன்போதே இரு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

## பணிப்புறக்கணிப்பால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர்கள் முதல் விபத்தில் படுகாயமடைபவர்கள் வரை பெரிதும் சிரமத்தையும் ஆபத்தையும் எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் தமது கோரிக்கைகள் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகங்கள், சுகாதார அமைச்சுக்கு நீண்டகாலமாகத் தெரியப்படுத்தியும் தீர்வு காணப்படாத நிலையிலேயே புறக்கணிப்பில் ஈடுபடுவதாக எக்ஸ்ரே கதிர் இயந்திரப் பகுதி உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இவர்களுக்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாடு தொடர்பில் தீர்வு காணப்படாத நிலையில் நோயாளர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

## ஜேர்மனியிலிருந்து 31....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பங்களின் மீள்பரிசீலனையின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டவர்களில் நால்வர் இறுதி நேரத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதேநேரத்தில் 31 புகலிடக் கோரிக்கையாளர்கள் தற்போது இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தந்தையின் மார்க்கம் எங்கே?

'தந்தை செல்வா' என்று நாம் எல்லோரும் போற்றும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் 123 ஆவது பிறந்ததினம் இன்றாகும்.

இலங்கைத் தமிழர்களின் கடந்த சுமார் முக்கால் நூற்றாண்டு கால விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க தலைவர்கள் இருவர்.

ஒருவர் தந்தை செல்வா. மற்றையவர் தலைவர் பிரபாகரன். இருவரினதும் விடுதலை இலக்குகள் ஒன்றுதான். ஆனால் இருவரும் தேர்ந்தெடுத்த பாதைகள் வெவ்வேறானவை. முரணிலை கொண்டவை.

ஆனால், இந்த இரு தலைவர்களிலும் ஓர் ஒற்றுமை உண்டு. அது தாம் கொண்ட கொள்கையில் பற்றுறுதியுடன் – விடாப்பிடியாக – அவர்கள் இருந்தமையாகும். தாங்கள் கொண்ட தீர்மானத்தில் தங்கள் வகித்துக் கொண்ட பாதையில் எந்தச் சவாலையும் உறுதியுடன் எதிர்கொள்ளும் திடசங்கற்பத்துடன் அவர்கள் காரியமாற்றினார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்த கால கட்டத்தின் முன்னும் பின்னும் பெரும் செல்வாக்குக் பெற்றிருந்த பொன்னம்பலம் இராமநாதன், ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்ற 'பொன்னர்'களுக்கு வழங்கப்படாத 'தந்தை' என்ற அடைமொழி கௌரவம், தந்தை செல்வநாயகத்துக்கு வழங்கப்பட்டமைக்கு ஆழமான – உணர்வுபூர்மான – காரணங்கள் உண்டு.

பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமியம் என்று உலகின் நான்கு பெரிய மகத்தான மதங்களையும் கொண்டது இலங்கைத் தீவு. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று மூன்று பிரதான இனங்களைக் கொண்டது அது. அத்தோடு சிங்களவர்கள், தமிழர்கள் என்று மொழி ரீதியில் பிரிந்து நிற்கும் இரு இனத்தவர்களையும் கொண்டது.

இவ்வாறு நான்கு மதங்கள், மூன்று இனங்கள், இரு மொழிகள் சார்ந்தவர்களாக பல சமூகக் கூட்டங்கள் இங்கு இருந்தன.

அவற்றில் ஒன்றுதான் தமிழ்ப் பேசும் சமூகம். வடக்கு, கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் தமிழ்ப் பேசும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்று பரந்து விரிந்து கிடந்த தமிழ்ப் பேசும் சமூகத்தைத் தமது தனித்துவ ஆளுமையால் ஒன்றுபடுத்திக் கட்டி, ஓரினக் குடும்பமாகத் தூக்கி நிறுத்தியவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம். அதனால்தான் அவர் எம் மத்தியில் – எம் மனதில் – 'தந்தை செல்வா' ஆக உயர்ந்தார்.

கிறிஸ்தவ மதத்தில் பிறந்த ஒருவர், தமது இன சமூகத்தில் பெரும்பான்மையினரான இந்துக்களாலும், தமது தமிழ் மொழியைப் பேசும் முஸ்லிம்களாலும் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டமையே – இன்று வரை 'தந்தை' ஏற்று போற்றி மதிக்கப்படுகின்றமையே – அவரது தலைமைத்துவத்தின் தனிச் சிறப்பை உணர்த்தப் போதுமானதாகும்.

காலம் முழுவதும் தமிழினத்துக்காக ஒரு முன்மாதிரித் தலைவராகச் செயற்பட்ட தந்தை செல்வா தமது கடைசிக் காலத்தில் 'இனித் தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று பெருமூச்செறிந்து, உரைத்து நம் மத்தியிலிருந்து விடைபெற்றார். அதற்கு – அப்படி அவர் கூறியமைக்கு – நியாயமான பல காரணங்கள் உண்டு.

அரிதாரம் பூசி, உருவத்தை மறைத்து, மேடையில் நடிக்கும் நடிகர்களைப் போன்று தமிழ் அரசியல் மேடையில் கூத்தாடிகள் அதிகரித்து விட்டனர். இவர்களின் தலைமைத்துவத்தில் தமிழ் மக்கள் சிக்கிச் சீரழியப் போகின்றனர் என்ற தீர்க்கதரிசனத்தில் தான் தந்தை அப்படிக் கூறினாரோ தெரியவில்லை.

பதவிக் கதிரையைக் கட்டிப் பிடித்திருப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட அரசியல் தலைவர்களின் கைகளில் இனம் சிக்கிக் கொண்டு விட்டுள்ள சூழலில் தந்தை செல்வா கூறியமை போல இனிக் கடவுள் வந்துதான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கும்.

1949 டிசெம்பரில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கிய போது அதன் ஸ்தாபகத் தலைவர் பதவியைத் தந்தை செல்வாவே பொறுப்பேற்றார். ஆனால் அதற்குப் பின்னர் அவர் கட்சியின் தலைவராக நீடிக்கவில்லை. மாறாக, வன்னியசிங்கம், நாகநாதன், இராசமாணிக்கம், இராசவரோதயம் என்று பல தலைவர்களையும் மாறி மாறிக் கட்சியின் தலைவர்களாக்கி பெருமையீட்டினார் தந்தை.

ஒரு சமயம், கட்சியின் செயலாளராகவும் கூட அவர் இறங்கிப் பணியாற்றத் தவறவில்லை.

ஆனால், இன்று தமிழரசுக் கட்சியின் நிலைமை என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் கொள்கை ரீதியாக ஒன்றிணைந்த தமிழ் அரசியல் கட்சிகளைத் தலைமையேற்று வழி நடத்த வேண்டிய வரலாற்றுப் பாத்திரத்தை – பொறுப்பை – ஏற்ற தமிழரசுக் கட்சியின் தலைவர்களின் வகிபாகமும் போக்கும் எத்தகையதாக உள்ளன?

கட்சியின் தலைமைப் பொறுப்பை ஆண்டுக் கணக்கில் கட்டிப் பிடித்துக் கொண்டு, அதை வைத்து அடுத்த அதிகாரப் பதவியைப் பிடிக்கும் பதவிப் பேராசையில்தான் கட்சித் தலைமை முனைப்பாக உள்ளது.

இந்தப் பின்புலத்தில் 'கடவுள்தான் தமிழினத்தைக் காப்பாற்ற வேண்டும்' என்ற தந்தையின் கூற்று தீர்க்கதரிசனமான வாசகம்தான்!

# கொரோனாக் கட்டுப்பாடு தொடர்பான அணுகுமுறையில் மாற்றம் வேண்டும்!

## வலியுறுத்துகின்றார் மணிவண்ணன்



கொரோனாக் கட்டுப்பாடு தொடர்பிலான தற்போதைய அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே வி.மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்த அவர் –

யாழ்.நகரில் சடுதியாக ஏற்பட்ட கொரோனா பரவலை அடுத்து மாநகரத்தில் பல நூற்றுக் கணக்கான வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டமையால் வர்த்தகர்களும் பொது மக்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனைத் தொடர்ந்து வர்த்தகர்களிடமிருந்து 1,000 இற்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் செய்யப்பட்ட நிலையில் இவற்றின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இவை தொடர்பில் பல முறைப்பாடுகள் வர்த்தகர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் எனக்கு தெரியப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து நான் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியுடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தேன்.

குறித்த பரிசோதனைகள் கொழும்பில் மேற்கொள்ளப்படுவதால் அதன் முடிவுகள் கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்பட்டது என்றார்.

மேலும் புது வருடம் அண்மிக்கின்ற நிலையில் விரைந்து வர்த்தக நிலையங்களைத் திறக்க வேண்டும் என்ற எனது கரிசனையை வெளிப்படுத்தினேன். குறித்த விடயம் தொடர்பில் நேற்று (செவ்வாய்) நடைபெற்ற கலந்துரையாடலில் எனது கருத்தை வலியுறுத்துமாறு சுகாதார வைத்திய அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

கொரோனாக் கட்டுப்பாடு தொடர்பிலான தற்போதைய அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று எண்ணுகின்றேன். தற்போது நான், ஆணையாளர், பிரதி ஆணையாளர், செயலாளர், பிரதம கணக்காளர், பிரதம பொறியியலாளர் என சுமார் 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மாநகர சபையின் செயற்பாடுகளும் தேக்கமடைந்துள்ளன. இது தொடர்பில் எனது பணிகளை மீண்டும் ஆரம்பித்ததும் சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாட விரும்புகின்றேன். – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அனுமதிக்காத நிலையில் வருகிறது 6 லட்சம் சினோபோம் தடுப்பூசிகள்!

அவசரகால பயன்பாட்டுக்கு இலங்கையில் சினோபோர்ம் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில் 6 லட்சம் டோஸ் தடுப்பூசி இன்று புதன்கிழமை இலங்கையை வந்தடையவுள்ளது.

சினோபோர்ம் தடுப்பூசியை இலங்கையர்களுக்கு செலுத்துவது தொடர்பாக உலக சுகாதார அமைப்பின் அங்கீகாரத்துக்காக அரசாங்கம் காத்திருக்கிறது என இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இதன் விளைவாக, ஆரம்பத்தில் சினோபோர்ம் தடுப்பூசிகள் இலங்கையில் உள்ள சீன நாட்டினருக்கு மட்டுமே வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனமும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழுவும் சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசிக்கு அங்கீகாரம் வழங்கவில்லை.

4 ஆம் கட்ட மருத்துவ சோதனை குறித்த முடிவுகள் கிடைக்காத நிலையில் தடுப்பூசியை உலகளவில் பயன்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை செய்யவில்லை என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

# வீதி விபத்துக்களில் 18 பொலிஸார் சாவு!

இந்த ஆண்டின் கடந்த சில மாதங்களில் பதிவான வீதி விபத்துக்களில் 72 பொலிஸார் காயமடைந்துள்ளமையுடன், 18 பொலிஸார் உயிரிழந்துள்ளனர் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதனால் காவல்துறையினர் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அவர் கூறினார். 2020 ஆம் ஆண்டில் வீதி விபத்துக்களில் 293 பொலிஸார் காயமடைந்தனர் எனவும், அவர்களில் 28 பேர் படுகாயங்கள் அடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்

# யாழில் முக்கிய பகுதிகள் முடங்கும் கடும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படும்



## ஆளுநர் அதிரடி

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் யாழின் நகர மத்தியை அண்மித்த முக்கிய பகுதிகள் முடக்கப்பட்டு கடும் நடவடிக்கை எடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நேற்றும் 79 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த ஆளுநர் –

இது வரை 499 தொற்றாளர்களாக இனம் காணப்பட்டவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடை சுமார் 1000 பேர் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு 1,000 பி.சி.ஆர். மாதிரிகள் கொழும்புக்கும் 1,000 மாதிரிகள் அநுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் நகரை அண்டியுள்ள பகுதிளிலும் சுகாதார நடைமுறைகளை கடுமையாக கண்காணிக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு அறுவுறுத்தப்பட்டுள்ளதாவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

நகரை சூழவுள்ள பகுதிகளில் பீ.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிக்கவும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பொது மக்கள் பரவலை மேலும் கட்டுப்படுத்த சுகாதார பிரிவினர் வழங்கியுள்ள வழிமுறைகளை கடைப்பிடிக்குமாறு ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பிரதமர் தேவேகவுடாவுக்கு கொரோனா: மனைவிக்கும் பாதிப்பு

முன்னாள் பிரதமர் தேவேகவுடாவுக்கு 87 வயதாகிறது. இதன் காரணமாக அரசியலில் தீவிரம் காட்டாமல் பெங்களூருவில் உள்ள வீட்டில் ஓய்வு எடுத்து வருகிறார்.

இந்த நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அவரே டுவிட்டரில் செய்தி ஒன்று வெளியிட்டுள்ளார்.

அதில், "எனக்கும், எனது மனைவி சென்னம்மாவுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இது உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. எனவே நாங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து விலகி எங்களை தனிமைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

சமீப காலங்களில் எங்களோடு தொடர்பில் இருந்தவர்கள் தங்களை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் தொண்டர்களும், எனது நலன்விரும்பிகளும் பயப்பட வேண்




டாம் என்றும் வேண்டுகோள் விடுக்கிறேன்" என்று கூறி உள்ளார்.

தற்போது நாட்டில் கொரோனாவால் 2 ஆவது அலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே முதல் அலை ஏற்பட்ட போது பல அரசியல் தலைவர்களுக்கும் நோய் தொற்று ஏற்பட்டது. அதேபோல் இப்போது 2 ஆவது அலையிலும் பல அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் நோய்த் தொற்றுக்கு ஆளாகி வருகிறார்கள்.

# டெல்லி சப்தர்ஜங் மருத்துவமனையில் தீ 50 நோயாளிகள் அவசரமாக வெளியேற்றம்



டெல்லியில் புகழ் பெற்ற சப்தர்ஜங் மருத்துவமனை உள்ளது. இங்குள்ள தீவிர சிகிச்சைப் பிரிவில் இன்றுகாலை6.30மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இந்த தீ விபத்தால் ஐ.சி.யூ. வார்டில் இருந்த நோயாளிகள் அலறினார்கள். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக மருத்துவ ஊழியர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த 50 நோயாளிகளையும் அங்கிருந்து வெளியேற்றி வேறு வார்டுக்கு கொண்டு சென்றனர்.

இந்த தீ விபத்து பற்றி அறிந்ததும் 9 வண்டிகளில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இந்த விபத்தில் யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை என்று முதல்கட்ட தகவல் தெரிவிக்கிறது.

தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# ஹோலிக்கு மது கிடைக்காததால் சானிடைசரைக் குடித்த இருவர் பலி



மத்தியப்பிரதேசத்தில் ஹோலி கொண்டாட்டத்திற்காக மதுவுக்கு பதிலாக சானிடைசரைக் குடித்த இருவர் உயிரிழந்தனர்.

கொரோனாத்தொற்று காரணமாக மத்தியப் பிரதேசத்தில் ஞாயிறு மற்றும் திங்கள் கிழமைகளில் மதுக்கடைகளை மூடுவதற்கு மாநில அரசு உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், பிந்த் மாவட்டத்தில் மதுபானம் கிடைக்காததால் 3 இளைஞர்கள் சானிடைசரைக் குடித்தனர்.

பின்னர் அவரவர் வீடுகளுக்குத் திரும்பியதும் மீண்டும் சானிடைசரை தண்ணீரில் கலந்து குடித்துள்ளனர். இதனால் கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்ட அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் இருவர் உயிரிழந்தனர். ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

# 2021 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 2019 ஆண்டை விட குறைவாகவே இருக்கும்

## ஐ.நா. சபை அறிக்கை

இந்தியாவின் 2021 பொருளாதார உற்பத்தி 2019 ஆண்டை விட குறைவாகவே இருக்க வாய்ப்புள்ளதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

ஆசிய பசுபிக் நாடுகளின் பொருளாதார சமூக ஆய்வு என்ற பெயரில் நடத்தப்பட்ட ஆய்வறிக்கை ஐ.நாவில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த ஆய்வில், கொரோனா பெருந்தொற்று காரணத்தால் 2021-22 ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 7 புள்ளி 7 விழுக்காடு சரிவடையும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்த பொருளாதார வளர்ச்சி 2019ம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டு குறைவாக இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வன்கொடுமை சட்டத்தை வைத்து மிரட்டல்

# பெண் அதிகாரி தற்கொலை உயரதிகாரி ஒருவர் கைது!



மகாராஷ்டிர மாநிலம் அமரவாதி மாவட்டத்திலுள்ள மெல்காத் புலிகள் வனச்சரணாலயத்தில் வன அதிகாரியாக பணி புரிந்து வந்தவர் தீபாலி சவான். இவரை, 'வனத்துறையின் லேடி சிங்கம்' என்று மகாராஸ்டிரத்தில் அழைப்பார்கள். உள்ளூர் ரவுடிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பயப்படாமல் வனத்தை காக்கும் பணியில் புலி போல தீபாலி செயல்பட்டு வந்தார். புல்லட்டில் தனியாளாக சென்று மரத்தை வெட்டுபவர்களை தீபாலி விரட்டிய கதைகளும் உண்டு. ஆனால், ரவுடிகளை எதிர்கொள்ள தெரிந்த தீபாலிக்கு துறைக்குள் இருந்த கயவாளிகளை எதிர்கொள்ள முடியவில்லை என்பதுதான் பெரும் சோகமாக அமைந்து விட்டது.

ஆனால்,இதே வனச்சரணாலயத்தில் துணை உத்தியோகத்தர் இருந்த வினோத் சிவக்குமார் என்பவர் தீபாலிக்கு பல வகைகளில் தொல்லை கொடுத்து வந்துள்ளார். அடிக்கடி மது குடித்து விட்டு கெட்ட வார்த்தைகளால் தீபாலியை திட்டுவதோடு, அவரின் பணியை செய்ய விடாமல் மனதளவில் காயப்படுத்தியுள்ளார். பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தல் அளித்துள்ளார், தீபாலியின் ஒரு மாத சம்பளத்தையும் நிறுத்தி வைத்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த மார்ச் 25 ஆம் அமராவாதியில் தான் வசித்து வந்த வனத்துறை குடியிருப்பிலேயே தீபாலி தன் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். மிகவும் தைரியமான வனத்துறை அதிகாரியாக பார்க்கப்பட்ட 28 வயதேயான இளம் வனத்துறை அதிகாரி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் மகாராஷ்டிராவில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தீபாலி எழுதிய தற்கொலை கடிதத்தில், தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை பட்டியலிட்டிருந்தார். தன்னை மாதத்துக்கு ஒரு முறை கூட குடும்பத்தாரை சந்திக்க விட்டதில்லை. இரவு நேரத்தில் தன்னை தனியாக சந்திக்க வருமாறு சிவக்குமார் அழைத்தார் என்று குற்றம் சாட்டியிருந்தார். மேலும் , மெல்காத் புலிகள் காப்பகத்தில் மங்கியா கிராமத்தில் சில உள்ளூர்வாசிகள் எஸ்.சி.– எஸ்.டி. சட்டத்தை வைத்து தன்னை மிரட்டியது குறித்து சிவக்குமாரிடத்தில் ஒரு முறை கூறினேன்.

அப்போது, தனக்கு ஆதரவளிப்பதற்கு பதிலாக, எஸ்.சி. – எஸ்.டி. சட்டத்தின் கீழ் உன்னை சிறைக்கு அனுப்பி விடுவேன் என்று மிரட்டியதாகவும் அந்த கடிதத்தில் தீபாலி குறிப்பிட்டிருந்தார். சிவக்குமார் குறித்து மெல்காத் புலிகள் காப்பகத்தின் தலைமை அதிகாரி சீனிவாச ரெட்டியிடம் பல முறை புகாரளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அந்த கடிதத்தில் தீபாலி கூறியிருந்தார்.

தீபாலியின் தற்கொலையை தொடர்ந்து, பெங்களூருவுக்கு தப்பிக்க முயன்ற துணை உத்தியோகத்தர் வினோத் சிவக்குமார் கைது செய்யப்பட்டார். மெல்காத் புலிகள் காப்பகத்தின் உத்தியோகத்தர் சீனிவாசரெட்டியும் திடீரென்று தலைமறைவாகவே உள்ளார். தற்போது, எம்.எஸ். ரெட்டி பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். சீனிவாச ரெட்டியையும் கைது செய்து விசாரிக்க வேண்டுமென்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

# போதைப்பொருள் வழக்கில் நடிகர் அஜாஸ் கான் கைது

பாலிவுட் நடிகர் சுஷாந்த் சிங் மரணத்துடன் தொடர்புடைய போதைப்பொருள் வழக்கில், சுஷாந்த் சிங்கின் காதலியும், நடிகையுமான ரியா சக்கரவர்த்தி, அவரது தம்பி சோவிக் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டு உள்ளனர். விசாரணை மற்றும் சோதனை தொடர்ந்து நடைபெறுகிறது.

அவ்வகையில் பாலிவுட் நடிகர் அஜாஸ் கான் இன்று கைது செய்யப்பட்டுள்ளார். அஜாஸ் கான் ராஜஸ்தானில் இருந்து நேற்று இரவு மும்பை திரும்பினார். மும்பை விமான நிலையத்தில் அவரை போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் அழைத்துச் சென்று தனியிடத்தில் வைத்து விசாரணை நடத்தினர். 8 மணி நேர விசாரணைக்குப் பிறகு போதைப் பொருள் வழக்கில் அவர் கைது செய்யப்பட்டார்.

அந்தேரி மற்றும் லோகண்ட்வாலா பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனையின்



போது, அஜாஸ் கான் வீட்டில் இருந்து போதை மாத்திரைகள் கிடைத்ததாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஷாதாப் பாரூக் ஷாயிக் என்ற போதைப்பொருள் வியாபாரியுடன் அஜாஸ்கான் தொடர்பில் இருந்ததாகவும் கூறப்பட்டுள்து.

கடந்த வியாழக்கிழமை ஷாதாப் பாரூக் ஷாயிக் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து தடை செய்யப்பட்ட மெபெட்ரோன் என்ற போதை மருந்து 2 கிலோ பறி முதல் செய்யப்பட்டது.


# திருப்பதியில் இலவச தரிசனத்துகான பக்தர்கள் எண்ணிக்கை குறைப்பு

ஆந்திராவில் கொரோனா பரவல் காரணமாக திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கும் சில நிபந்தனைகளை தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

திருமலையில் உள்ள அன்னமைய்ய பவனில் தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி தர்மா ரெட்டி தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்று பரவுவதால், பக்தர்களின் உடல் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு இனி இலவச தரிசன டோக்கன் களை குறைப்பது எனும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தற்போது தினசரி 22 ஆயிரம் இலவச தரிசன டோக்கன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது இனி 15 ஆயிரமாக குறைக்கப்படும். அன்னபிரசாத மையம், விடுதிகள் வழங்கும் மையங்கள் அருகே தெர்மல்



பரிசோதனை செய்யப்படும். திருமலைக்கு வரும் பக்தர்கள் இனி கண்டிப்பாக முகக் கவசங்கள் மற்றும் கைகளை சுத்தம் செய்துக்கொள்ள கிருமி நாசினி போன்றவற்றை கொண்டு வர வேண்டும்.

திருமலையில் அனைத்து இடங்களிலும் பக்தர்கள் கட்டாயமாக சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். இதற்கு பக்தர்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் கொரோனாவில் இருந்து மீண்டார்



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கும் அவரது மனைவி புஷ்ரா பிபிக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கடந்த 20 ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவர்கள் இருவரும் தங்களைத் தானே தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்த நிலையில் பிரதமர் இம்ரான்கான் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து முழுமையாக மீண்டு பூரண குணம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இம்ரான்கானுக்கு மிகவும் நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் ஜாவத் இந்த தகவலை தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில் அவர் பிரதமர் கொரோனாவில் இருந்து மீண்டு விட்டார். அவர் படிப்படியாக தனது பணியை தொடங்கியுள்ளார். தேசிய மற்றும் சர்வதேச வழிகாட்டுதல்களை கருத்தில் கொண்டு மருத்துவரின் அறிவுறுத்தலின் படி அவர் தனது வழக்கமான பணிகளுக்கு திரும்ப தொடங்கியுள்ளார். வைரஸ் பரவாமல் தடுக்க பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே இம்ரான்கான் குணமடைந்து விட்டதாக கூறப்படும் நிலையில் அவரது மனைவி புஷ்ரா பிபி கொரோனாத் தொற்றில் இருந்து மீண்டு விட்டாரா என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.

முன்னதாக நேற்று முன்தினம் அந்த நாட்டின் அதிபர் ஆரிப் அல்வி மற்றும் இராணுவ அமைச்சர் பெர்வைஸ் கட்டாக் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரேஸில் அமைச்சரவையில் அதிரடி புதிதாக 6 அமைச்சர்கள் நியமனம்



உலக அளவில் கொரோனா வைரஸ் பாதிப்பில் பிரேஸில் 2 ஆவது இடத்தில் உள்ளது. அங்கு 1 கோடியே 20 லட்சத்துக்கும் அதிகமானோரை வைரஸ் தாக்கிய நிலையில், 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதிபர் ஜெயீர் போல்சனாரோ தலைமையிலான அரசு கொரோனா வைரஸை முறையாக கையாளவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. இதனை நிரூபிக்கும் விதமாக கொரோனா பரவ தொடங்கியதில் இருந்து இப்போது வரை 4 முறை சுகாதாரத்துறை அமைச்சர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சராக இருந்து வந்த எர்னஸ்டோ அராஜுவோ இந்தியா, சீனா மற்றும் அமெரிக்காவுடனான உறவுகளை மோசமாக கையாண்டதால் அந்த நாடுகளிடம் இருந்து போதிய அளவு கொரோனாத் தடுப்பூசிகளை பெற முடியாமல் போனது என கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. இதனைத்தொடர்ந்து நேற்று முன்தினம் அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார். இதையடுத்து அமைச்சரவையில் மாற்றம் கொண்டு வர வேண்டுமென கூட்டணி கட்சிகள் அதிபர் ஜெயீர் போல்சனாரோவுக்கு அழுத்தம் கொடுத்தன. அதன்பேரில் பதவிக்கு வந்த 2 ஆண்டுகளில் முதல் முறையாக அதிபர் ஜெயீர் போல்சனாரோ மிகப்பெரிய அளவில் தனது அமைச்சரவையை மாற்றியமைத்துள்ளார்.

வெளியுறவு, இராணுவம், உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் நீதி உள்பட முக்கியமான 6 துறைகளுக்கு அவர் புதிய அமைச்சர்களை நியமித்துள்ளார்.

## தான்சானியா அதிபர் இறுதிச்சடங்கில் நெரிசல் தள்ளுமுள்ளில் 45 பேர் உடல் நசுங்கி உயிரிழப்பு



தான்சானிய அதிபர் ஜான் மகுபுலியின் இறுதிச்சடங்கின் போது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் மிதிபட்டு 45 பேர் உடல் நசுங்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் காலமான முன்னாள் அதிபர் உடலைக் காண ஏராளமானோர் திரண்டிருந்தனர். பலர் அவர் உடலைக் காண சுவர்களின் மீதும் ஏறி நின்றனர்.

அப்போது எதிர்பாராத விதமாக நெரிசல் அதிகரித்து தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் பலர் கீழே விழுந்து மிதிபட்டு நசுங்கினர்.

இதனைத் தொடர்ந்து அரசு மரியாதையுடன் முன்னாள் அதிபரின் உடலுக்கு இறுதிச் சடங்கு நடைபெற்றது.

## உலக அளவில் கொரோனாப் பாதிப்பு 12.87 கோடி எண்ணிக்கையை கடந்தது

சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. கொரோனாப் பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, பிரேஸில், இந்தியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 12.87 கோடியைக் கடந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 10.39 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

மேலும், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 28.14 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 2.20 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 95,700 இற்கு மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சூயஸ் கால்வாயில் சிக்கிய கப்பல் பிரச்சினை: கப்பலில் பணியாற்றிய இந்தியர்களுக்கு சிக்கல்



சூயஸ் கால்வாயில் சிக்கிய பிரம்மாண்ட கப்பல் பிரச்சினையால் ஏற்பட்ட குழப்பத்தை திசை திருப்புவதற்காக, அந்த கப்பலில் பணி செய்யும் இந்திய பணியாளர்களை பலிகடாவாக ஆக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதால் அச்சம் ஏற்பட்டுள்ளது. 220,000 தொன் எடையுள்ள எவர் கிவன் சரக்குக் கப்பல் சூயஸ் கால்வாயில் குறுக்கே சிக்கி நின்றதால், சரக்குக் கப்பல் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

ஆறு நாள்கள் அந்த கப்பல் சிக்கி நின்றதால், நாளொன்றுக்கு 650 கோடி பவுண்டுகள் வர்த்தகம் தடைப்பட்டு நின்றது.

இந்நிலையில், இராட்சத இயந்திரங்கள் மூலம் கப்பல் தரை தட்டியிருந்த இடத்திலிருந்த மண் அகற்றப்பட, பல சிறு படகுகள் இணைந்து கால்வாயில் குறுக்கே நின்ற அந்த கப்பலை திருப்பின. அதைத் தொடர்ந்து சூயஸ் கால்வாயிலிருந்து வெளியேறி மற்ற கப்பல்களுக்கு வழிவிட்டது. ஆனால், எதனால் இந்த பிரச்சினை ஏற்பட்டது என்பதை அறிவதற்காக விசாரணை அதிகாரிகள் விசாரணையைத் தொடங்கியுள்ள நிலையில், அந்த கப்பலில் பணியாற்றும் இந்தியர்கள் மீது பழியைத் தூக்கிப் போட திட்டமிடப்பட்டுள்ளதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

அந்த கப்பலில் 25 இந்திய பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் மீது கிரிமினல் குற்றச்சாட்டுகள் சாத்தியம் உட்பட, குழுவினர் எதிர்கொள்ளக்கூடிய சட்ட சிக்கல்கள் குறித்து இந்திய அரசாங்கமும் கடற்படை அமைப்புகளும் கவலை கொண்டுள்ளன.

கப்பல் துறையின் வட்டார தகவல்களின்படி, கப்டன் மற்றும் குழுவினர் மேலும் பயணம் செய்வதைத் தடுக்கலாம். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை முடியும் வரை அவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்படலாம். எவ்வாறாயினும், கப்பல் நிர்வாகம், குழுவினர் செல்ல வேண்டிய சட்ட நடைமுறைகள் குறித்து எதுவும் விளக்கவில்லை.

அத்துடன், இந்த பிரச்சினைக்கு மனித தவறு காரணமா என்பதை அறிவதற்காக, கப்பலை செலுத்திய இரண்டு எகிப்திய மாலுமிகளும் விசாரணைக்குட்படுத்தப்பட உள்ளார்கள். என்றாலும், கப்பலில் பணியாற்றும் இந்திய பணியாளர்கள் அலட்சியமாக பணியாற்றியதால் இந்த பிரச்சினை ஏற்பட்டதாக அவர்கள் குற்றம் சாட்டப்படலாம் என்றும், சிறையிலடைக்கப்படலாம் என்றும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த பிரச்சினையில், இந்திய பணியாளர்கள் பலிகடா ஆக்கப்படும் அபாயம் உள்ளது என்பது மட்டும் தெளிவாக தெரிகிறது என கப்பல் துறையிலுள்ள மூத்த உறுப்பினர் ஒருவர் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையிடம் தெரிவித்துள்ளார்.

## கொரோனாவால் தொடர்ந்து அதிரும் பிரேஸில் ஒரே நாளில் 3,600 இற்கும் அதிகமானோர் பலி

பிரேசிஸிலில் கொரோனா பாதிப்பு கடந்த சில நாள்களாக தொடர்ந்து அதிகரித்தே வருகிறது. அங்கு கடந்த 24 மணி நேரத்தில் 86 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, கொரோனா வைரஸால் பாதிப்பு அடைந்தோர்




எண்ணிக்கை ஒரு கோடியே 26 லட்சத்தைத்தாண்டியுள்ளது.

அதேபோல், தொற்றுப் பாதிப்பால் ஒரே நாளில் 3,668 பேர் உயிரி ழந்துள்ளனர். மொத்த உயிரிழப்பு 3 லட்சத்து 17 ஆயிரத்தை கடந்துள்ளது.

கொரோனாவில் இருந்து குணம் அடைந்தவர்கள் எண்ணிக்கை 1.10 கோடியைக் கடந்துள்ளது. தொற்றுப் பாதிப்புடன் 12 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் சிகிச்சையில் உள்ளனர்.

இதன்மூலம் உலக அளவில் கொரோனா பாதிப்பு அதிகமுள்ள பட்டியலில் பிரேஸில் இரண்டாம் இடத்தில் நீடிக்கிறது

# மோடிக்கு நன்றி தெரிவித்து பாகிஸ்தான் பிரதமர் கடிதம்

பாகிஸ்தான் தேசிய தினத்திற்கு வாழ்த்துத் தெரிவித்த பிரதமர் மோடிக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.

தெற்காசியாவில் இந்தியா பாகிஸ்தான் இடையிலான காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் சுமுகமான முறையில் தீர்வு காணவும் தெற்காசியாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உருவாக்கவும் பாகிஸ்தான் விரும்புவதாக அக்கடிதத்தில் இம்ரான் கான் குறிப்பிட்டுள்ளார்.

ஆக்கப்பூர்வமான இருதரப்பு பேச்சுக்கு இணக்கமான சூழ்நிலையை உருவாக்குவது அவசியம் என்றும் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தான் மக்கள் அண்டை நாடுகளுடன் அமைதியை விரும்புவதாக இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

புதிய பிரிவு A/L 2023
கணக்கீடு
திரு. க. பா. பாலகஜன்
M.Com (Hons), B.Com (Jaf.),H.N.Dip.-in. ACC.,Dip.-in-Edu.
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
கொழும்புத்துறை - சனி, ஞாயிறு
2.15 p.m - 3.30 p.m
கந்தர்மடம் - சனி, ஞாயிறு
7.00 a.m - 8.00 a.m
Zoom class - திங்கள்,வெள்ளி
7.30 p.m - 8.30 p.m
A/L 2021 & DAY, A/L 2022 வகுப்புகளும் நடைபெறுகின்றன.
புதிய அனுமதிகளுக்கு அழையுங்கள்.
077 216 8884

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 தசாப்த கால யுத்தத்தின் வலிகளை மார்பிலே சுமந்த சமூகம் நாங்கள்

## வியாழேந்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 31

கிழக்கு மாகாணத்தில் மற்றைய சமூகங்கள் அடைந்திருக்கும் வளர்ச்சியோடு எம் தமிழ் சமூகத்தை ஒப்பிடும்போது கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தினால் பல்வேறுபட்ட வேதனைகள் மற்றும் இன்னல்களையும் வலிகளையும் மார்பிலே சுமந்துகொண்டிருக்கின்ற ஒரு சமூகமாக நாங்கள் இருக்கின்றோமென இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற வீதி அபிவிருத்திப் பணியினை ஆரம்பித்துவைக்கும் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் நாட்டைக்கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக நாட்டில் ஒரு இலட்சம் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் சிபாரிசுக்கமைவாக மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சின்னகாலபோட்டமடு கிராமத்தின் பிரதான வீதியினை 01 கிலோமீற்றர் கொங்கிறீட் வீதியாக மாற்றியமைக்கும்திட்டத்தினை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

அடிப்படை உரிமைகளான வீதி, வீடு, மலசல கூடம் போன்றவை எமது தமிழ் மக்களுக்கு தேவைதானா என கேட்கும் சில அரசியல்வாதிகளிடம் நான் ஒரு கேள்வியை கேட்க விரும்புகின் றேன். எங்களுக்கு உரிமை தேவை என்பது உண்மை ஆனால் அத்தோடு அடிப்படை உரிமை என்ற விடயமும் இருக்கின்றது. அவைதான் உணவு, உடை, உறையுள் அதுவும் எமக்கு தேவை. அதை கூட மூன்று தசாப்த கால யுத்தத்தினால் இழந்து நிற்கின்ற ஒரு சமூகமாகத்தான் எமது தமிழ் சமூகம் காணப்படுகின்றது.- என அமைச்சர்மேலும் தெரிவித்தார் .



# பாரம்பரிய உணவுப் பழக்கங்கள் புதிய சந்தைக்கு செல்லவேண்டும்

## அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் தெரிவிப்பு

அம்பாறை ,மார்ச் 31

பாரம்பரிய உணவுப் பழக்கங்களை புதிய சந்தைகளுக்கு எடுத்துச் செல்லவேண்டும் என அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தோடு இணைந்து ஏற்பாடு செய்த மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையம் ஏற்பாடு செய்த உற்பத்தி கண்காட்சி நேற்று நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேலதிக அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார். பெண்கள் தமது சுய தொழில் முயற்சிகள் ஊடாக பிரதேசத்திலும் மாவட்டத்திலும் ஏன் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பாரியளவில் பங்களிப்புச் செய்து வருகின்றார்கள்.

உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்ற போது முதலீடுகள், இலாபம் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். சமூகத்திற்கும் அடுத்த பரம்பரைக்கும் புதிய சிந்தனைகளை கொண்டு செல்ல வேண்டும்.

முஸ்லிம்களின் பெருநாள் காலங்களாக இருந்தாலும் சரி தமிழ் சமூகங்களுடைய புதுவருடம் அல்லது ஏனைய கலாசார நிகழ்வுகளாக இருந்தாலும் சரி எமது பாரம்பரிய உணவுப் பழக்கங்கள் அழிந்து வருகின்றன.

பாரம்பரிய உணவு முறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அவற்றை நாம் கடைகளில் இருந்து கொள்வனவு செய்கின்ற விடயம் ஒரு ஆரோக்கியமான விடயமல்ல. புதிய அடுத்த தலைமுறையினருக்கு இந்த பாரம்பரிய உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்கின்ற முறைகள் தொடர்பாக அறிவுறுத்தப்பட வேண்டும்.

எனவே எமது வீடுகளில் நடைபெறும் முக்கியமான நிகழ்வுகளின் போது நாம் எமது கலாசார உணவு முறைகளை உற்பத்தி செய்ய பழகிக்கொள்ள வேண்டும்.

வீட்டிலேயே ஒரு கைவினை உற்பத்தி தொழில் தெரிந்தவராக இருக்கின்றபோது அடுத்தவரை நம்பி இருக்க வேண்டிய அவசியம் எமக்கு தேவையில்லை. ஒரு நிரந்தர வருமானத்தை தரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

எனவே இவற்றை சரியாக பயன்படுத்திக்கொள்ள பிரதேச செயலகங்களில் அவற்றுக்கான முழு வளங்களும் உள்ளன. அவற்றை உரிய முறையில் உத்தியோகத்தர்களுக்கு இடையில் சிறந்த தொடர்புகளைப் பேணி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# விபுலானந்தரின் திருவுருவச்சிலை திரைநீக்கம்

சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தினால் வருடா வருடம் சிறப்புற நடாத்தப்பட்டு வரும் முத்தமிழ் விழாவின் நான்காவது ஆண்டினை நினைவுகூரும் முகமாக சம்பூரில் நிறுவப்பட்ட உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமிவிபுலானந்தரின்திருவுருவச்சிலைகடந்த ஞாயிற்றுக் கிழமை வணக்கத்திற்குரிய சுவாமி தக்ஸ்மஜானந்தரால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு ராமகிருஸ்ண சங்கத்தினுடைய பொது முகாமையாளர் சுவாமி தக்ஸ்மஜானந்தவும், சிறப்பு விருந்தினராக தென்கைலை ஆதீனத்தினுடைய குரு முதல்வர் தவத்திரு அகத்தியாரும், கௌரவ விருந்தினர்களாக மூதூர் பிரதேச சபையின் சம்பூர் வட்டாரத்திற்கான உறுப்பினர் து.ஜெகனும், கொட்டியாபுரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியத்தினுடைய பொதுச் செயலாளர் கலாபூசணம் சம்பூரணம் அருளம்பலம் குகராஜாவும், திருகோணமலை சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினுடைய தலைவர் ஆ. செல்வநாயகமும், சம்பூர் மகாவித்தியாலத்தின் அதிபர் சோ. கங்கேஸ்வரன் மற்றும் தமிழார்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ரஜ வாசல திட்டத்தின் கீழ் மட்டக்களப்பிற்கு கடைகள்

மட்டக்களப்பு,மார்ச் 31

மட்டக்களப்பு கள்ளியங்காடு உணவு திணைக்களத்திற்கு சொந்தமான மூன்றாவது கட்டடத்தை மீள புனரமைப்பு செய்து அதை ரஜ வாசல திட்டத்தின் கீழ் பல்கடைத் தொகுதி ஒன்றினை அமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் அவரது அமைச்சு காரியாலயத்தில் இடம்பெற்றது

எதிர்வரும்சித்திரைப்புத்தாண்டிற்கு முன்னர் மூன்றாவது கட்டடத்தை மீள புனரமைப்பு செய்து அதை ரஜ வாசல திட்டத்தின் கீழ் பல்கடைத் தொகுதி ஒன்றினை அமைத்து தருவதாக மட்டக்களப்பு கள்ளியங்காடு உணவு திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன வாக்குறுதி அளித்திருந்தார்.

அதனடிப்படையில் .இதில் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தைச்சேர்ந்த முகாமையாளர் எந்திரி. ரகுராமன் அவர்கள் குறித்த கட்டடம் தொடர்பான வடிவமைப்பு, அதன் மதிப்பீடும் பற்றிய விளக்கத்தை வழங்கியதுடன் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களது பார்வைக்கு முன்வைத்திருந்தார்.

இந்த கூட்டத்தில் அமைச்சின் செயலாளர், உணவு ஆணைக்குழுவின் தவிசாளர், அரச வர்த்தக ஆணைக்குழுவின் தவிசாளர், மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆர். ஜதீஸ்குமார் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் பணிப்பின் பேரில் அஸாத் மௌலானா மற்றும் சட்டத்தரணி மங்களேஸ்வரி சங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த கூட்டத்தில் ரஜ வாசல திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான மதிப்பீடும் வடிவமைப்பு பற்றிய விடயமும் கலந்துரையாடப்பட்டு எதிர்வரும் காலங்களில் நடைமுறைப் படுத்துவதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டது.

# மகளை கர்ப்பமாக்கிய தந்தைக்கு 10 வருட கடுழீயச் சிறைத்தண்டனை

திருகோணமலையில் சொந்த மகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி குழந்தை பிரசவித்திற்கு காரணமாக இருந்த தந்தைக்கு10வருடகடூழியசிறைத்தண்டனை விதித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று (30) தீர்ப்பளித்துள்ளார்.

குறித்த சம்பவம் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்றதாகவும், கர்ப்பம் தரித்த பின்னரே இவ்விடயம் பொலிஸ் முறைப்பாட்டிற்கு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையின் போது கர்ப்பமடைந்துள்ளமை தெரியவந்துள்ளதாக வைத்திய கலாநிதி நீதிமன்றில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

சந்தேகநபரான தனது தந்தை தன்னிடம் தகாத முறையில் நடந்துக் கொண்டார் எனவும், இதன் காரணமாகவே தனக்கு இந்நிலை ஏற்பட்டதாகவும் சிறுமி நீதிமன்றில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் சிறுமியின் சாட்சியத்தின் பின்னர் மன்றில் ஆஜராகாது தலைமறைவாகியுள்ள சந்தேகநபரை குற்றவாளியென நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும் சந்தேகநபருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை மற்றும் 5 லட்சம் ரூபா நஷ்ட ஈடும் வழங்குமாறும் இதனை வழங்க தவறும் பட்சத்தில் மேலும் 2 வருடம் சிறைத்தண்டனை வழங்கப்படுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் சந்தேகநபர் நாட்டை விட்டு வெளியேறாத வகையில் கைது செய்யுமாறு கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன், பகிரங்க பிடிவிறாந்தும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தாதியர்களுக்கு நியமனம் வழங்கல்

அம்பாறை, மார்ச் 31

அம்பாறை இலங்கை தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 2016 ஆண்டு தாதியர் பயிற்சியை நிறைவு செய்த தாதியர்களுக்கு நியமனக் கடிதங்களை கையளிக்கும் நிகழ்வு அம்பாறை தாதியர் பயிற்சிக் கல்லூரி கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி திருமதி.ஜுமானா ஹஸீன், அம்பாறை பொது வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர். உபுல் விஜயநாயக, அம்பாறை தாதியர் பயிற்சிச் கல்லூரி அதிபர் திரு.ஜே.கனகநாயகம் ஆகியோர் உட்பட சுகாதாரத்துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரகாரம் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் நியமனம் பெற்ற தாதியர் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள வைத்தியசாலைகளில் சேவையினை தொடரவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது ரி 20 போட்டியிலும் நியூசிலாந்து வெற்றியீட்டியது



பங்காளதேஷிற்கு எதிரான 2ஆவது ரி 20 ஆட்டத்தில் 28 ஓட்ட வித்தியாசத்தில் வென்ற நியூசிலாந்து தொடரையும் 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது. நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் ரி20 தொடரில் விளையாடி வருகிறது. முதல் ஆட்டத்தை 66 ஓட்ட வித்தியாசத்தில் வென்றது. இந்நிலையில் இரண்டாவது ரி 20 போட்டி நேற்று நேப்பியரில் நடந்தது. நாணய சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் பந்து வீச்சை தேர்வு செய்தது. முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஓவர்களின் எண்ணிக்கை 17.5 ஆக குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 17.5 ஓவர் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களை எடுத்தது. பொறுப்புடன் விளையாடிய கிளென் பிலிப்ஸ் முப்பத்தொரு பந்துகளை எதிர்கொண்டு 2 சிக்ஸர் மற்றும் 5 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 58 ஓட்டங்களுடனும் டாரியல் மிட்சல் பதினாறு பந்துகளை எதிர்கொண்டு 6 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் பங்களா தேஷைச் சேர்ந்த மெகதி ஹசன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஓவர்கள் குறைக்கப்பட்டதால் டக்வொர்த் லூயிஸ் விதிகளின் படி பங்களாதேஷ் 16 ஓவரில் 170 ஓட்டங்கள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும் 16ஓவர் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதன் மூலம் நியூசிலாந்து ஆட்டத்தை வென்றது. பங்களாதேஷ் அணியில் சார்பில் அதிகபட்சமாக சவுமியா சர்க்கார் இருபத்தேழு பந்துகளை எதிர்கொண்டு 3 சிக்ஸர் மற் றும் 5 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 51 ஓட்டங்களும் முகமது நயீம் முப்பத்தைந்து பந்துகளை எதிர்கொண்டு 4 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 38 ஓட்டங்களும் எடுத்தனர். நியூசிலாந்து தரப்பில் அணித்தலைவர் டிம் சவுத்தீ, பென்னட், மிலன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி 20 தொடரை 2 - 0 என்ற கணக்கில் நியூசிலாந்து கைப்பற்றியுள்ளது. மூன்றாவதும் இறுதியுமான போட்டி நாளை ஆக்லாந்தில் நடைபெறவுள்ளது.

# இந்திய அணியில் அடுத்த 10 வருடத்துக்கு ரிஷப் பண்ட் தாக்குப்பிடிப்பார் - சரண்தீப் சிங்



ரிப் பன்ட்டால் கொடுக்க முடிந்ததை நிச்சயமாக சாஹாவால் கொடுக்க முடியாது என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தேர்வாளர் சரண்தீப் சிங் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றிற்கு பேட்டியளித்த சரண்தீப் சிங் ரிஷப்பை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவருக்கு முன்பு உடற்தகுதியில் சில பிரச்சினைகள் இருந்தன. ஆனால் அதனை சரி செய்ய கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார். அதன் விளைவாக அவர் இப்போது நல்ல உடற் தகுதியுடன் இருக்கிறார். 21 வயதான ரிஷப் 30 வயதான வீரரை போல அவ்வளவு சிறப்பாக விளையாடுகிறார் என்றார்.

மேலும் அதே போல ஹார்திக் பாண்ட்யாவின் துடுப்பாட்டத்திலும் அவ்வளவு முதிர்ச்சி தெரிகிறது. இவையெல்லாம் அனுபவங்களால் வரக்கூடியது. கடந்த 6 மாதத்தில் ரிஷப் தன்னுடைய ஆட்டத்தை வெகுவாக மெருகேற்றியிருக்கிறார். அதுவும் ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான ஆட்டங்களில் அவ்வளவு நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். டெஸ்ட் கிரிக்கெட்டில் இன்னும் 10 ஆண்டுகளுக்கு அவர் விளையாடுவார். சாஹாவால் அதனை தர முடியாது. இப்போது ரிஷப் பண்ட் மட்டுமே இந்தியாவின் விக்கெட் காப்பாளர் சாய்ஸ் என்றார் சரண்தீப் சிங்.

தொடர்ந்து பேசிய அவர், ஒருநாள் போட்டிகளில் ஸ்ரேயாஸ் ஐயர் காயமடைந்தார். அவருக்கு பதிலாக ரிஷப் களமிறங்கி ஜொலித்தார். அவர் காயத்திலிருந்து மீண்டதும்கே.எல்.ராகுல் விக்கெட் காப்பாளர் பணியை செய்வார், ரிஷப் பண்ட் வெளியே அமர்வார். ஏனென்றால் விக்கெட் காப்பாளர் பணியையும் துடுப்பெடுப்பையும் வெகு காலமாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார் என்றார் சரண்தீப் சிங்.






# டெல்லி கேப்பிட்டல்ஸ் அணித்தலைவராக ரிஷப் பண்ட் நியமிக்கப்பட்டார்!

டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியின் புதிய தலைவராக ரிஷப் பண்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான முதல் போட்டியின் போது ஷ்ரேயாஸ் அஜ்யர் உபாதைக்குள்ளானார்.

இதன்காரணமாக எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். தொடரில் ஷ்ரேயாஸ் அஜ்யர் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையிலேயே டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியின் புதிய தலைவராக ரிஷப் பண்ட் நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்றைய தினம் அணி நிர்வாகம் உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இதன்மூலம் மிகக்குறைந்த வயதில் ஐ.பி.எல். தொடரில் அணியினை வழிநடத்துபவர் என்ற பெருமையினை ரிஷப் பண்ட் பெற்றுள்ளார்.

# மியாமி பகிரங்க டென்னிஸ்: நவோமி ஒசாகா, பியான்கா காலிறுதிக்கு முன்னேற்றம்



மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 5ஆவது இடத்தில் இருக்கும் கிரீஸ் வீரர் சிட்சிபாஸ், கடந்த ஆண்டு ஏற்பட்ட காயத்தில் இருந்து மீண்டு வந்துள்ள 39ஆம் நிலை வீரரான ஜப்பானின் நிஷிகோரியை சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சிட்சிபாஸ் 6 - 3, 3 - 6, 6 - 1 என்ற செட் கணக்கில் நிஷிகோரியை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் 8ஆவது இடத்தில் உள்ள ரஷ்ய வீரர் ஆந்த்ரே ரூப்லெவ் 6 - 2, 6 - 1 என்ற நேர்செட்டில் ஹங்கேரியின் மார்டோன் புக்சோவிச்சை 52 நிமிடத்தில் விரட்டியடித்து அடுத்த சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தார். இந்த ஆண்டில் ரூப்லெவ் சுவைத்த 18ஆவது வெற்றி இதுவாகும்.

பெண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருக்கும் ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா 6 - 3, 6 - 3 என்ற நேர்செட்டில் 17ஆம் நிலை வீராங்கனையான எலிசி மெர்டென்சை (பெல்ஜியம்) துவம்சம் செய்து தொடர்ச்சியாக 23ஆவது வெற்றியை ருசித்ததுடன், முதல்முறையாக கால்லிறுதிக்குள் நுழைந்தார்.

நம்பர் ஒன் வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி 6 - 1, 1 - 6, 6 - 2 என்ற செட் கணக்கில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்காவை வீழ்த்தி கால்லிறுதியை எட்டினார். இன்னொரு ஆட்டத்தில் 2019ஆம் ஆண்டு அமெரிக்க ஓபன் சாம்பியனான கனடா வீராங்கனை பியான்கா ஆன்ட்ரீஸ்கு சரிவில் இருந்து மீண்டு வந்து 3-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனையான கார்பின் முகுருஜாவை (ஸ்பெயின்) சாய்த்து முதல்முறையாக கால்லிறுதிக்கு தகுதி பெற்றார். இதேபோல் உக்ரைன் வீராங்கனை எலினா ஸ்விடோலினா சரிவை சமாளித்து 2-6, 7-5, 7-5 என்ற செட் கணக்கில் பெட்ரா கிவிடோவாவை (செக்குடியரசு) வெளியேற்றி கால்லிறுதிக்குள் நுழைந்தார். மற்ற ஆட்டங்களில் மரியா சக்காரி (கிரீஸ்), செவஸ்தோவா (லாத்வியா), சபலென்கா (பெலாரஸ்), சாரா சோரிப்ஸ் டோர்மோ (ஸ்பெயின்) ஆகியோரும் வெற்றி பெற்று கால்லிறுதிக்கு முன்னேறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தலைக் கைவிடாது விடின் மகாசங்கத்தினரை ஒன்றிணைத்து போராடுவோம்

## சோபித தேரர் எச்சரிக்கை

தேர்தல் காலத்தில் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த முயற்சிக்கிறது.

மாகாண சபை முறைமை இலங்கைக்கு பொருத்தமற்றது. மாகாண சபைத் தேர்தலை நடத்தும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். இல்லாவிடின் மகா சங்கத்தினரை ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுப்படுவோம் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

எம்பிலிபிடிய பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு நாட்டு மக்கள் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. மாறாக அரசியல்வாதிகளே மாகாண சபை முறைமை ஊடாக இலாபம் பெற்றுக்கொள்ளப் போராடுகிறார்கள்.

தேர்தல் காலத்தில் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த முயற்சிக்கிறது.

மாகாண சபைத் தேர்தல் இலங்கைக்குப் பொருத்தமற்றதாக உள்ளது. மாகாண சபை முறைமை ஊடாக எவ்வித பயனும் ஏற்படவில்லை. மாறாக மிதமிஞ்சிய செலவுகள் மாத்திரமே ஏற்பட்டுள்ளன.

தேர்தல் முறைமை காரணமாக மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. மாகாண



சபை நிர்வாகம் ஜனாதிபதியின் பிரதிநிதிகளால் முன்னெடுக்கப்படுகிறது. இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

மாகாண சபை முறைமையை முழுமையாக இரத்து செய்து உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அரசியல்வாதிகளின் சுயநலத் தேவைக்காக மாகாண சபை முறைமை நிர்வகிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே, மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும். இல்லாவிடின் மகா சங்கத்தினரை ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுபடுவோம்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. பொருளாதார ரீதியில் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் அதனை விடுத்து மாகாண சபைத் தேர்தலை நடத்த முயற்சிப்பது பயனற்றது. – என்றார்.

# நபர்களைத் தாக்கப் பொலிஸ்க்கு அனுமதியில்லை: மீறி செயற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண காட்டம்

பன்னிப்பிட்டிய பகுதியில் லொறியில் மோதுண்டு காயமடைந்த மஹரகம பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரியான சப் இன்ஸ்பெக்டர் மைத்திரிபால, கலுபோவில வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

எனினும், லொறியின் சாரதியை தாக்கியமை சட்டவிரோதமானது. அதனால், சம்பந்தப்பட்ட பொலிஸ் போக்குவரத்து பிரிவின் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரது பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

பன்னிபிட்டிய பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த , போக்குவரத்து பொலிஸ் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை லொறி சாரதியொருவரைத் தாக்கும் காட்சி இணையத்தளத்தில் வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் கவனம் செலுத்திய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர, இது தொடர்பில் உடனே விசாரணைகளை முன்னெடுத்து, சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்நிலையில் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில், விசேட பொலிஸ் குழுவொன்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வந்தனர். அதற்கமைய சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரது பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவத்தின் போது, கடமையில் ஈடுபட்டிருந்த மஹரகம போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியான சப் இன்ஸ்பெக்டரை குறித்த லொறி மோதியுள்ளதுடன், இதன்போது படுகாயமடைந்த அவர் தற்போது கலுபோவிலை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

லொறியின் சாரதியின் கவனக்குறைபாடின் காரணமாகவே விபத்து ஏற்பட்டுள்ளது. எனினும், சம்பந்தப்பட்ட சாரதியை தாக்கியமை சட்டத்திற்கு புறம்பான செயற்பாடாகும்.

குற்றச் செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை தாக்குவதற்கு பொலிஸாருக்கு அனுமதிவழங்கப்படவில்லை.

அவர் குற்றம் செய்துள்ளார் எனத் தெரியவந்தால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளையே எடுத்திருக்க வேண்டும். அதனால் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொலிஸ் ஒழுங்காற்று விதிமுறைகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவருக்கு எதிராக பொலிஸ் ஒழுங்காற்று சட்டவிதிகளுக்கமையவும், குற்றவியல் சட்டவிதிகளுக்கு கீழும் சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# வவுனியாவில் இளைஞர் குழு அட்டகாசம்; இருவர் படுகாயம்

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் இளைஞர் குழு ஒன்று வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து கைகலப்பில் ஈடுபட்டதில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள மதுபானசாலையில் மது அருந்தி விட்டு வந்த இளைஞர் குழு ஒன்று மதுபானசாலைக்கு முன்பாக இருந்த வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து அதன் உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தியதுடன், அருகில் இருந்த வர்த்தக நிலையங்களில் நின்றோர் மற்றும் வீதியில் நின்றோரையும் அச்சுறுத்தியுள்ளது.

இதன்போது அப்பகுதியில் ஏற்பட்ட அடிதடி மற்றும் கைகலப்பில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நீதிமன்றத்தின் உத்தரவு வரும் வரை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நிறுத்தம்

நீதிமன்றத்தின் உத்தரவு வரும்வரை அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டாம் என அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எதிர்த்து நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் பொன்சேகா மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ரிட் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனுக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர உள்ளடங்கலான மூவர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அந்தவகையில் அமைச்சரவை செயலாளர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டாம் என குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதனை அடுத்து குறித்த மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் மே 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது.

# மாகாணசபைக்கான தேர்தலை ஒரு புதியமுறையில் நடத்துக!

## சுதந்திரக் கட்சி தெரிவிப்பு



மாகாண சபைத் தேர்தலை, ஒரு புதிய முறைமையின் கீழ் நடத்துங்கள் என இலங்கை சுதந்திரக் கட்சி, அரசாங்கத்துக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த இலங்கை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும் நாங்கள், பழைய விருப்பத்தேர்வு முறைகளுக்கு எதிரானவர்கள். ஆகவே, மாகாண சபைத் தேர்தலை ஒரு புதிய முறையின் கீழ் நடத்துங்கள் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அந்தவகையில் அரசாங்கம் புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு முன்வருமாக இருந்தால் அதனை நாம் வரவேற்கின்றோம் என தயாசிறி ஜெயசேகர குறிப்பிட்டுள்ளார்

# ரஞ்சன் ராமநாயக்கவைச் சந்திக்க வாரம் ஒரு பார்வையாளர் அனுமதி

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை பார்வையிட வாராந்தம் ஒரு பார்வையாளருக்கு அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

அத்தோடு சில நிபந்தனைகளின் கீழ் அவர் வாரத்துக்கு ஒரு முறை தொலைபேசியை பயன்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ன ராஜகருணா அவருடன் சிறைக்குள் எடுத்த புகைப்படத்தை வெளியிட்டமையைத் தொடர்ந்து இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

# அரசு மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எதிர்க்கட்சிக்கு எதிராக கொழும்பில் போராட்டம்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவர்களது குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் மீது எதிர்க்கட்சி சுமத்திய குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என குற்றம் சாட்டி அக்கட்சிக்கு எதிராக போராட்டமொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில், 'பஹனட்ட ஆயில்' தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி போராட்டம் தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் சி.சமரஹேவா தெரிவித்துள்ளவை வருமாறு –

அரசாங்கம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், தீவிரவாதம் மற்றும் சுற்றுச்சூழல் அழிவு தொடர்பான அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்கும் நோக்கில் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த விடயங்களுக்காக அரசாங்கத்துக்கு எங்களது ஆதரவைத் தொடர்ச்சியாக வழங்குவோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2021 இல் வெளியிடப்பெற்றது.